# புதிய கிறிஸ்தவர்களுக்கு இடையூறுகள் (9:19-31; 22:17-21)

*அப்போஸ்தலராகிய பவுல், கிறிஸ்தவ வாழ்க்கையை ஒரு ஓட்டத்திற்கு அடிக்கடி ஒப்பிட்டார் (1 கொரி. 9:24-27; 2 தீமோ. 4:7, 8). சிலருக்குக் கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஒரு முழு வேகத்தில் ஓடுகிற ஓட்டத்தைப் போன்றதாயிருக்கின்றது; அவர்களால் அந்த ஓட்டம் முழுவதையும் முழு வேகத்துடன் முடிக்க முடிகிறது. நம்மில் பலருக்கு இது ஒரு தொடர் ஓட்டமாக, பொறுமையான ஒரு ஓட்டமாக இருக்கின்றது. ஆயினும் பவுல் எதிர்கொண்ட ஓட்டமானது மிகவும் இடையூறுகள் நிறைந்ததாக இருந்தது. ஞானஸ்நானம் பெற்றுத் தண்ணீரிலிருந்து வெளிவந்த கணத்திலேயே, நீக்கப்பட வேண்டிய இடையூறுகளையும், மேற்கொள்ளப்பட வேண்டிய தடைகளையும் அவர் பெற்றிருந்தார். இந்தப் பாடத்தில் நாம் பவுலின் தொடக்ககால ஊழியம் பற்றித் தொடர்ந்து படிப்போம். இவ்வாறு நாம் படிக்கையில், பவுல் எதிர்கொண்ட சில இடையூறுகளை நாம் கவனிப்போம். கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிருக்கும் பலர் எதிர்கொள்ளும் இடையூறு களைப் போலவே அவருக்கும் அறைகூவல்கள் நேரிட்டபடி யால், அவர் அவைகளை எவ்விதத்தில் மேற்கொண்டார் என்பதைக் காண நாம் விசேஷமாய் விரும்புகின்றோம்.*

## தோல்வியின் இடையூறு *(9:19-22)*

பெற்றோர்களுக்குத் தங்களின் குழந்தை முதலாவது அடி வைக்கும்போது, அது மன உற்சாகமுள்ள கணங்களாயிருக் கின்றது. அந்தக் குழந்தை ஒரு அடி எடுத்து வைத்துப் பின் கீழே விழுகின்றது. பிறகு மறுபடியும் அது முயற்சி செய்கின்றது.

தனது இரண்டாவது அடிவைப்புக்குப் பிறகு, அது மீண்டும் ஒருமுறை தடுமாறிக் கீழே விழுகின்றது. படிப்படியாக அது விழுவதற்கு முன் இரண்டு, மூன்று மற்றும் அதற்கும் அதிகமான அடிவைப்புகளை எடுத்து வைக்கின்றது. எங்களது இரண்டாவது மகள் டெபியின் தொடக்க கால அடிவைப்புகள் பற்றிய வீட்டில் எடுத்த திரைப்படத்தை ஆனந்தத்துடன் கண்டு களிப்பதுண்டு. அவள் நடக்கத் தொடங்கினாள் என்பதைக் காட்டிலும் ஓடத்தொடங்கினாள் என்று சொல்வதே சரியானதாக இருக்கும் (அவள் இன்னமும் தனது நடையை மெதுவாக்கிக் கொள்ளவில்லை!). ஆயினும் எங்களது திரைப் படத்தில் டெபி தளர் நடை நடக்கையில் சில சமயம் தவறி விழுகின்றாள். இதைக் கவனியுங்கள்: முதல் இரண்டு அல்லது மூன்று முயற்சிகளில் டெபி விழுந்த பிறகு எழுந்திருக்கா திருந்தால் என்னவாயிருக்கும்? இப்போது செல்லுமிடங்களுக் கெல்லாம் நாங்கள் தூக்கிச் செல்ல வேண்டிய வளர்ந்த மகளாகவே அவள் இருந்திருப்பாள்!

குழந்தைகளைப் போலவே, கிறிஸ்துவுக்குள் குழந்தைகளும் நடக்கக் கற்றுக் கொள்ள வேண்டியதாய் இருக்கின்றது - அவர்கள் மற்ற குழந்தைகளைப் போல அடிக்கடியில்லா விட்டாலும், எப்போதாவது தடுமாறி விழுகின்றார்கள், "புதிய கிறிஸ்தவர்கள் வாழ்வு மற்றும் ஊழியத்தில் கொண்டிருக்க வேண்டிய கிறிஸ்தவக் குறிக்கோளில் இருந்து சில வேளைகளில் தவறுவார்களா?" என்பது கேள்வியல்ல. வேதவசனங்களும், நமது அனுபவங்களும், அவர்கள் விழுவார்கள் என்றே நமக்குக் கூறுகின்றன. "அவர்கள் விழும்போது, மறுபடியும் எழுந்து தொடர்ந்து முயற்சி செய்வார்களா?" என்பதே முக்கியமான கேள்வியாக இருக்கின்றது.

தமஸ்குவிலும், எருசலேமிலும் சவுல் தமது தொடக்க கால முயற்சிகளைத் தோல்வியுடையவைகளாகவே கண்டார் என்பது நிச்சயமாகும். நள்ளிரவில் தமஸ்குவிலிருந்து தப்பித்து வந்ததை அவர் தமது பலவீனமாகப் பின்னாளில் பட்டியலிடுகின்றார் (2 கொரி. 11:30, 32, 33). அவர் எருசலேமில் இருந்து தாம் தப்பித்து வந்ததைப் பற்றிப் பின்னாளில் பேசுகையில், தாம் மனமில்லாமல் அப்படி வந்ததாகவே சுட்டிக் காட்டினார் (அப். 22:17-21). ஆயினும், சவுல் தமக்கு நேரிட்ட தோல்வியின் இடையூறுகளைத் தமது விசுவாசத்தின் மூலம்

விலக்கிப் போடக் கூடியவராயிருந்தார். அவர் வெளியேறி விடவில்லை; அவர் தம்மைத்தாமே ஒருங்கமைத்துக் கொண்டு, மறுபடியும் முயற்சி செய்தார்.

நீங்கள் உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையைத் தொடங்குகையில், சவுலிடத்திலிருந்து கற்றுக் கொள்ளுங்கள்: தோல்வியை இறுதியானதாக அனுமதித்து விடாதீர்கள். நீங்கள் விழும் போது, மறுபடியும் எழுந்து, மறுபடியும் முயற்சி செய்யுங்கள். நடக்கக் கற்றுக் கொள்வதற்கு இது ஒன்றே வழியாகும். முயற்சி செய்வதை விட்டுவிட்டு, ஒன்றும் செய்யாமல் இருப்பது பாதுகாப்பானதாக இருக்கலாம், ஆனால் அது உங்களை ஆவிக்குரிய வகையில் ஊனமுற்றவராக, எப்பொழுதும் மற்றவர்களைச் சார்ந்திருக்கக் கூடியவராகச் செய்து விடும்![1]

ரோமானியாவில் உள்ள பிரேஸவ் என்ற இடத்தில் நானும் எனது துணைவியாரும் சமீபத்தில் சில நாட்களைச் செலவிட்டோம். அங்குள்ள புதிய கிறிஸ்தவர்களின் வளர்ச்சி எனது கருத்தைக் கவர்ந்தது. அவர்களின் ஆராதனையில் ஏறக்குறைய அங்கிருந்த ஒவ்வொரு இளைய கிறிஸ்தவரும் ஒரு வேதப் பகுதியை வாசித்தார், ஜெபத்தில் வழி நடத்தினார், பாடலில் வழி நடத்தினார் அல்லது ஒரு சிறு பிரசங்கம் கொடுத்தார். அந்த சமயத்தில் அந்த இளம் கிறிஸ்தவர்கள், "பாதுகாப்புடன் செய்வது" என்ற நிலையை அடைந்து சங்கடத்தில் மாட்டிக் கொள்வது போன்ற எதையும் செய்திருக்கவில்லை. அவர்கள் - தவறுகள் செய்வது உட்பட - *முயற்சி* செய்ததினாலேயே வளர்ந்திருந்தனர்!

## உபத்திரவத்தின் இடையூறு (9:23-25)

சவுல் ஞானஸ்நானம் பெற்ற பிறகு, தமஸ்குவின் ஜெப ஆலயங்களில் பிரசங்கிக்கத் தொடங்கினார் என்று நாம் கடந்த பாடத்தில் கண்டோம். அவர் ஒரு சமயத்தில் அரபு தேசத்தின் பாலைவனப் பகுதிக்குச் சென்றார் என்றும் நாம் அறிந்து கொண்டோம். அரபு தேசத்திலிருந்து திரும்பிய பிறகு, சவுல் தமஸ்குவில் தொடர்ந்து பிரசங்கித்தார். "அநேக நாள் சென்ற பின்பு, யூதர்கள் அவனைக் கொலை செய்யும்படி ஆலோசனை பண்ணினார்கள்" (9:23). விவாதத்தினால் அவர்கள் அவரது நாவை அடக்க முடியவில்லை, எனவே மரணத்தின் மூலம்

அதை அடக்க அவர்கள் முயற்சி செய்தார்கள்.[2] "ஆதாரத்தை அழிப்பதற்கு உலகத்தின் வழி மரணமாகும்" என்று ரிக் ஆட்ச்லி கூறியுள்ளார்!

வசனம் 24ல், "அவர்களுடைய யோசனை சவுலுக்குத் தெரிய வந்தது. அவனைக் கொலை செய்யும்படிக்கு அவர்கள் [யூதர்கள்] இரவும் பகலும் கோட்டை வாசல்களைக் காத்துக் கொண்டிருந்தார்கள்'' என்று கூறப்படுகின்றது. பவுல், கொரிந்தியர்களுக்கு இதைப் பற்றி எழுதும்போது, "தமஸ்குப் பட்டணத்து அரேத்தா ராஜாவினுடைய சேனைத் தலைவன் என்னைப் பிடிக்க வேண்டுமென்று தமஸ்கருடைய பட்டணத் தைக் காவல் வைத்துக் காத்தான்'' (2 கொரி. 11:32) என்ற புதிரான குறிப்பையும் சேர்த்துக் கொடுத்தார். நான் இதைப் புதிரானதென்று அழைப்பது ஏனென்றால், முதலாவதாக, அரபு தேசத்து அரசனான அரேத்தாவுக்கு தமஸ்குவில் (ரோமாபுரிய ரால் கட்டுப்பாடு பண்ணப்பட்ட பட்டணத்தில்[3]) எந்த வகையான அதிகாரம் இருந்ததென்று நாம் அறிவதில்லை. ஆயினும், மிகவும் புதிரானது என்னவென்றால், சவுலைக் கொலை செய்வதற்கு அரபு தேசத்தாரும், யூதர்களும் ஒன்று சேர்ந்து முயற்சி செய்தனர் என்பதே ஆகும்! இப்பொழுது போலவே அப்பொழுதும் யூதர் மற்றும் அரபு தேசத்தார் ஆகியோர் ஒன்று சேர்வது என்பது வழக்கத்திற்கு மாறான தாகும்![4] ஒருவேளை, யூதர்கள் தமஸ்குப் பட்டணத்தில் அந்த அளவுக்கு அரசியல் செல்வாக்கைப் பெற்றிருந்திருக்கலாம்; ஒருவேளை, யூதர் மற்றும் அரபு தேசத்தார் ஆகியோர் சவுலை ஒரு அச்சுறுத்தலாகக் கண்டிருக்கலாம்.[5] காரணம் எதுவாக இருந்தாலும், தமஸ்குப் பட்டணத்தின் எல்லா சாதனங்களும் ஒரு மனிதரைக் கொலை செய்ய முயற்சி செய்யும்படி முடுக்கி விடப்பட்டன!

சவுல் தப்பித்துச் செல்லுதல் என்பது புதிய ஏற்பாட்டில் நன்கு அறியப்பட்ட வரலாறுகளில் ஒன்றாகும்: ''சீஷர்கள் இராத்திரியிலே அவனைக் கூட்டிக் கொண்டுபோய், ஒரு கூடையிலே வைத்து, மதில் வழியாய் இறக்கி விட்டார்கள்'' (9:25). பின்னாளில் பவுல், "அப்பொழுது நான் கூடையிலே வைக்கப்பட்டு, ஜன்னலிலிருந்து மதில் வழியாய் இறக்கி விடப்பட்டு, அவனுடைய கைக்குத் தப்பினேன்" (2 கொரி. 11:33) என்று எழுதினார். நகரம் ஒன்றின் மதிற்சுவர்களில்

*குடியிருப்பு வீடுகளைக் கட்டுவதென்பது பொதுவான வழக்க மாயிருந்தது (யோசு. 2:15). அப்படிப்பட்ட வீடு ஒன்றினுள் சவுலின் நண்பர்கள் அவரை அவசரமாய்ச் சூழ்ந்து கொண்டிருந் ததை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது. இறுதியாக, அங்கிருந்த ஒருவர், அறையை விட்டு வெளியே சென்று, ஒரு தோளில் கனத்த கயிற்றுச் சுருளுடனும், இன்னொரு கையில் பெரிய கூடை ஒன்றுடனும் திரும்பி வந்தார். கூடையில் இருந்தவற்றை வெளியே எடுத்துப் போட்டுவிட்டு, சவுலிடம், "இக்கூடையில் நீங்கள் உட்கார முடியுமா என்று பாருங்கள்" எனக் கூறினார். சில நிமிடங்களில் சவுல் இருளினூடே, அங்கிருந்த ஜன்னல் ஒன்றின் வழியாக இறக்கி விடப்பட்டார். இருளில் அசைவாடியவாறே, அவ்வப்போது மதிற் சுவரில் மோதிக் கொண்டவாறே, அவர் இறங்கியதையும், இறுதியாக கூடை தரையில் மோதிய போது அதை விட்டு வெளியே அவர் குதித்ததையும் என்னால் காண முடிகின்றது.*

*நான் ஒரு இளைஞனாயிருந்தபோது, பவுல் தப்பிச் சென்றது ஒரு உணர்ச்சி மிகுந்த கிளர்ச்சியான சாதனை என்று நினைத்தேன். பவுலுக்கோ அது உணர்ச்சி மேலிட்டதாயிரா மல், சங்கடத்துக்குரியதாக இருந்தது - எந்த ஒரு வளர்ச்சி பெற்ற மனிதரும் செய்யத் தயங்குகின்ற கௌரவமற்ற வகையில் ஒரு பட்டணத்தை விட்டு வெளியேறும் செயலாகப்பட்டது! (2 கொரி. 11:30-33) தமஸ்குவிற்குள் மாபெரும் அதிகார தோரணையுடன் நுழைந்து, அதை விட்டு மாபெரும் பலத்தின் தோரணையுடன் (அழுகின்ற கிறிஸ்தவர்களைச் சங்கிலிகளில் கட்டி இழுத்துச் செல்வது என்ற செயலுடன்) வெளியேறுவதே அவரின் உண்மைத் திட்டமாய் இருந்தது. அதற்கு மாறாக, அவர் பார்வையற்ற ஒரு பிச்சைக்காரன் போலப் பட்டணத் திற்குள் நுழைந்து, தப்பிச் செல்லும் ஒரு குற்றவாளியைப் போல அதை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று!*

*நான் மட்டும் சவுலாக இருந்திருந்தால், தப்பித்துக் கொண்ட பிறகு, வெறுப்புணர்வுகள் ஆறும் மட்டும் ஒளிந்து கொள்ளத் தனிமையான ஓரிடத்தைத் தேடியிருப்பேன். இருப்பினும் சவுல், தமஸ்குப் பட்டணத்தாரைக் காட்டிலும் அதிகமாகத் தன்னை வெறுக்கக் கூடிய மக்கள் இருக்கும் நகரை நோக்கித் தெற்கு முகமாகப் புறப்பட்டுச் சென்றார்; அவர் எருசலேமை நோக்கிச் சென்றார்.*

*சவுல் உபத்திரவத்தின் இடையூறை நீடிய பொறுமை யினால் நீக்கிப் போட்டார். இயேசு இப்படிப்பட்டவர்களை, "வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிற வர்களாயிருக்கிறார்கள்" (லூக். 8:15) என்று பாராட்டினார்.*

*கிறிஸ்தவர்களாயிருப்பதென்பது, இங்கும் இதற்குப் பின்வரும் வாழ்க்கையிலும் ஆசீர்வாதத்தைத் தருகின்றது - ஆனால் இதற்கு, கிறிஸ்தவ வாழ்க்கை சுலபமானது என்று அர்த்தமல்ல. சிலர் உங்கள் கிறிஸ்தவ நடக்கையைப் பற்றி உங்களை ஊக்கம் இழக்கப் பண்ணி, தடுமாறி விழப் பண்ணவோ அல்லது கீழே தள்ளவோ செய்யக்கூடும்! அப்படி நடந்தால் இதை நினைத்துக் கொள்ளுங்கள்: "கவலைப்பட வேண்டாத மனிதர்களைப் பற்றி பிசாசானவன் அக்கறைப் படுவதில்லை!" எனது சிந்தனைக்கு ஒரு நண்பரின் நினைவு வருகின்றது. நான் அந்த இளைஞரை ஞானஸ்நானப்படுத்திய போது, அவர் உணர்வெழுச்சியடைந்த நிலையில், தம்மை அறிந்தவர்கள் யாவரும் தமக்காக மகிழ்ச்சியடைவார்கள் என்று நினைத்தார்; ஆனால் அவரது நண்பர்கள் அவரை மனநிலை மாறாட்டம் உடையவர் என்று எண்ணினார்கள், அவரது குடும்பத்தார் இதை அவமானமாக உணர்ந்தார்கள். அவர் புதிய ஏற்பாட்டின் உபதேசங்களை எல்லாரும் ஏற்றுக்கொள்வார்கள் என்றெண்ணி, தாம் அறிந்த ஒவ்வொருவரையும் மனம் மாற்ற முயற்சி செய்தார் - அவர்கள் மனமாற்றமடையவில்லை. இந்த இளைஞர் மற்றவர்களால் கீழே தள்ளப்பட்ட ஒவ்வொரு முறையும் அவர் எழுந்து நின்று, மறுபடியும் முயற்சி செய்தார். அவரது நீடிய பொறுமையினால் இன்று அவர் செயல்படும் உறுப்பினராக உள்ள உள்ளூர் சபையில் நன்மைக்கான செல்வாக்கைப் பெற்றிருக்கின்றார்!*

## *கடந்த காலத்தின் இடையூறு (9:26-28)*

*சவுல் எருசலேமுக்குப் பயணமானபோது, மூன்று வருடங்களுக்கு முன்பு கர்த்தர் தமக்குத் தரிசனமான இடத்தைக் கடந்திருப்பார் (கலா. 1:18) அதன் பிறகு சுமார் 140 மைல்கள் பிரயாணம் செய்த பின், எருசலேம் பட்டணத்தின் மதிற் சுவர்கள் பார்வையில் பட்டிருக்கும். அநேகமாக அவர்,*

இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடமாகிய கல்வாரியைக் கடந்து சென்றிருப்பார். அவர், ஸ்தேவான் கல்லெறியப்பட்டுக் கொலை செய்யப்பட்ட இடத்தைக் கடந்து சென்றிருக்கலாம். அவருடைய ஆத்துமாவில் என்ன விதமான உணர்வுகள் பெருக்கெடுத்து ஓடியிருக்கும்!

அவர் எருசலேம் சென்று சேர்ந்த போது, ஒரு நண்பர் கூட இல்லாத ஒரு மனிதராக இருந்தார். அவர் தமது யூத விசுவாசத்தைக் கை விட்டு விட்டதால், அவரது முன்னாள் யூதத் தோழர்கள் அவருடன் ஒன்றும் செய்வதற்கில்லாதிருந்தது, அவர் யூத விசுவாசத்தை விட்டுவிட்டது பற்றி நிச்சயமாய் அறிந்திராத கிறிஸ்தவர்களும் அவருடன் ஒன்றும் செய்வதற் கில்லாதிருந்தது! "சவுல் எருசலேமுக்கு வந்து, சீஷருடனே சேர்ந்து கொள்ளப் பார்த்தான்;[6] அவர்கள் அவனைச் சீஷனென்று நம்பாமல் எல்லாரும் அவனுக்குப் பயந்திருந் தார்கள்"[7] (9:26). சவுல் ஒரு அப்போஸ்தலரா என்பதில் மட்டுமல்ல, ஆனால் அவர் ஒரு கிறிஸ்தவரா? என்பதிலேயே அவர்கள் சந்தேகம் கொண்டார்கள்! அவர்களின் நம்பிக்கை யைப் பெற்று அதன் மூலம் எருசலேமில் இருக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவரையும் கண்டு பிடித்து அவர்கள் எல்லாரையும் சிறையில் அடைப்பதற்காக ஒரு புத்திசாலித் தனமான ஏமாற்று வேலையாக "அவரது மனமாற்றம்" இருந்ததென்று அவர்கள் நினைத்தார்கள்!

நாம் சவுலின் இடத்தில் இருந்திருந்தால், நம்மில் அநேகர் "சபையார் என்னை விரும்பவில்லையென்றால், நான் அவர்களை விரும்பப் போவதில்லை!" என்று கூறிவிட்டு, புண்பட்ட உணர்வுகளுடன் பட்டணத்தை விட்டுச் சென்றிருப் போம். ஆயினும் சவுல் தீர்மானமுள்ள மனிதராயிருந்தார். முடிவாக அவர் ஆறுதலின் மகனான (4:36) ஒரு நண்பரைக் கண்டார். சபையார் சவுலை ஏற்றுக் கொள்ள மறுத்ததில் வியப்பேதும் இல்லை, ஆனால் "மிகவும் குறிப்பிடத் தக்க விஷயம் என்னவென்றால், அதை (சவுலின் மனமாற்றத்தை) முற்றிலுமாக நம்பி, அவரது மறு ஒப்புரவாகுதலைச் சபை முழுவதற்கும் எடுத்துச் செல்லும் தைரியமுள்ளவர் ஒருவர் இருந்தார்." அவர்தான் பர்னபா:

அப்பொழுது பர்னபா என்பவன் அவனைச் சேர்த்துக்

*கொண்டு, அப்போஸ்தலரிடத்தில் அழைத்துக் கொண்டு போய், வழியிலே அவன் கர்த்தரைக் கண்ட விதத்தையும்,[8] அவர் அவனுடனே பேசினதையும், தமஸ்குவில் அவன் இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்ததையும் அவர்களுக்கு விவரித்துச் சொன்னான் (அப். 9:27).*

*பர்னபா சவுலைப் பற்றி இவ்வளவு அதிகமாக எவ்விதம் அறிந்தார்? அவர்கள் இருவரும் கிறிஸ்தவர்களாவதற்கு முன்பாகவே பர்னபா சவுலை அறிந்திருந்ததாகச் சிலர் யூகிக்கின்றார்கள். பர்னபா சீப்புரு தீவிலிருந்து வந்தவர் (அப். 4:36), சீப்புரு தீவு சிலிசியாவிலிருந்து தொலைவில் இல்லை. அவர் சவுலை முன்னதாகவே எருசலேமிலும் சந்தித்திருக்கக்கூடும். பர்னபா தமஸ்குவுக்குப் பிரயாணம் செய்து, அங்கு அவர் சவுலைப்பற்றி அறிந்ததாகவும் சிலர் எண்ணுகின்றனர். பர்னபா சிறந்த மனிதர்களை நம்பி, அவர்களை ஊக்கப் படுத்துபவராக இருந்தார் என்பதே சிறந்த விளக்கமாக இருக்கும்! பர்னபா சவுலுக்காக நிலை நிற்பதற்குத் தமது நற்பெயர் மற்றும் நம்பகத் தன்மை ஆகியவற்றைப் பயன்படுத்தினார்.*

*அந்தச் சமயத்தில், பவுல் நற்செய்திப் பயணம் எதையும் மேற்கொண்டிருந்ததில்லை; பதிமூன்று அல்லது பதினான்கு நிருபங்களில் ஒன்றையும் அப்பொழுது அவர் எழுதியிருந்ததில்லை. பர்னபா மட்டும் அங்கிருந்திருக்கவில்லை யென்றால், நாம் ஆவிக்குரிய நிலையில் எவ்வளவு ஏழ்மை நிலையில் விடப்பட்டிருப்போம்! அவர் அப்போஸ்தலர்களை நம்பச் செய்து, அப்போஸ்தலர்கள் எருசலேமிலிருந்த மற்ற கிறிஸ்தவர்களை நம்பச் செய்தமைக்காக நாம் எவ்வளவாய் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்!*

*சவுல் எருசலேமில் இருக்கையில், பேதுரு தமது இல்லத்தில் தங்கும்படி அவரை அழைத்தார் (கலா. 1:18). "அதன் பின்பு அவன் எருசலேமில் அவர்களிடத்தில் போக்கும் வரத்துமாயிருந்து: கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்து" (9:28, 29அ). விரைவிலேயே அந்தப் பகுதியிலிருந்த எல்லா சபைகளிலும், "முன்னே நம்மைத் துன்பப் படுத்தினவனே, தான் அழிக்கக் தேடிய விசுவாசத்தை இப்பொழுது பிரசங்கிக்கின்றான்" (கலா. 1:23) என்ற செய்தி பரவியது.*

*கடந்த காலத்தின் இடையூறைப் பவுல் பொறுமையினால் நீக்கிப் போட்டார். கிறிஸ்தவர்கள் தம்மைக் குறித்து எச்சரிக்கையாய் இருந்தது ஏன் என்று சவுல் புரிந்து கொண்டிருந்தார். நம்பிக்கை என்பது ஒரு தரம் இழக்கப்பட்டால் மறுபடியும் அதைப் பெறக் காலமாகும் என்பதை அவர் அறிந்திருந்தார். மறுதலிப்பானது தம்மை அதைரியப்படுத்த அவர் அனுமதிக்கவில்லை - முடிவில் அவர் ஏற்றுக் கொள்ளப்பட்டார். உங்கள் கடந்த கால வாழ்க்கையினால் நீங்கள் மதிக்கப்படாமல் போகும் சந்தர்ப்பங்கள் நேரிடலாம். அப்போது உங்கள் சகோதரர்களிடம் பொறுமை இழந்து விடாதீர்கள்; அவர்களின் கண்ணோட்டத்தில் உங்களை நீங்கள் காண முயற்சி செய்து, பொறுமையாயிருங்கள். எபேசியர் 4:1, 2ல் பவுலின் அறிவுரையானது ஏற்றுக் கொள்ளப்படுவதை விரும்பி நாடுபவருக்கும், அதை அளிப்பவருக்கும் நல்லதாயிருக்கின்றது: "ஆதலால் ... நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி", என்று எழுதுகிறார்.*

## மனக் கடினத்தின் இடையூறு
## *(9:29, 30; 22:17-21)*

*எருசலேமில் சவுல் பிரசங்கிக்கையில், அவர் முதலாவதாகச் சென்ற இடங்களில் ஒன்று, ஸ்தேவான் பிரசங்கித்திருந்த[9] யூத(கிரேக்க)ர்களின் ஜெப ஆலயங்களாகும். அங்கு முடிவுறாத வேலை அவருக்கிருந்தது: "... கிரேக்கருடனே பேசித் தர்க்கித்தான்" (9:29அ). "தர்க்கித்தான்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது அப். நட. புத்தகத்தில் இதைத் தவிர, இன்னும் ஒரே ஒரு இடத்தில்தான் காணப்படுகின்றது. அப். 6ல் லிபர்த்தீனர் எழும்பி "ஸ்தேவானுடனே தர்க்கம் பண்ணினார்கள்" (6:9) என்று நாம் வாசிக்கின்றோம். ஸ்தேவான் தொடங்கி வைத்திருந்த வேலையை முடித்து வைக்கப் பவுல் திரும்பி வந்தார்.*

*யூத(கிரேக்கர்)களின் ஜெப ஆலயமானது சவுலுக்கு மிகவும் அபாயமான இடமாயிருந்தது. யூத(கிரேக்கர்)கள் ஸ்தேவானுக்குப் பதில் கூற முடியாமல் போனபோது, அவர்கள் அவரை*

*வெறுத்து, மரணத்திற்கு ஒப்புக் கொடுத்திருந்தனர். சவுலுக்கு எதிரான அவர்களின் பகையுணர்வு இன்னும் அதிகமாயிருந் திருக்கும், ஏனென்றால் சவுல் ஒரு துரோகியென்றும், காட்டிக் கொடுப்பவர் என்றும், விசுவாசத்தை விட்டு விலகி அவர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டார் என்றும் அவர்கள் சிந்தையில் எண்ணமிருந்தது![10] ஆகையால் ''அவர்களோ அவனைக் கொலை செய்ய எத்தனம் பண்ணினார்கள்'' (9:29அ) என்று படிக்கும் போது வியப்படைவதில்லை! மக்கள் சவுலின் மீது கோபமடைந்து அவரைக் கொலை செய்யும்படி விருப்ப மடையச் செய்வதற்கு தமஸ்குவிலும் அரபு தேசத்திலும் சவுலுக்கு மூன்று ஆண்டுகள் தேவைப்பட்டிருந்தது. ஆனால் எருசலேமில் இரண்டு வாரங்களுக்குள்ளாகவே இச்செயல் நடைபெறத் தொடங்கியது (கலா. 1:18).*

*தேவனுடைய ஈவினால் மறுபடியும் ஒருமுறை இச்சதித் திட்டம் பற்றி அறியப்பட்டது; தேவனுடைய ஈவினால் மறுபடியும் ஒருமுறை தம்மை மீட்கச் சவுல் தமது கிறிஸ்தவ நண்பர்களைப் பெற்றிருந்தார். நாம், "சகோதரர் அதை அறிந்து, அவனைச் செசரியாவுக்கு அழைத்துக் கொண்டு போய், தர்சுவுக்கு அனுப்பி விட்டார்கள்" (9:30) என்று படிக்கின்றோம். எருசலேமிலிருந்து வடமேற்கில் சுமார் 70 மைல் தூரத்திலிருந்த செசரியா ஒரு முக்கியத் துறைமுகப் பட்டணமாயிருந்தது. தர்சுப் பட்டணம் சவுலின் சொந்த ஊராக இருந்தது.*

*சவுல் எருசலேமிலிருந்து புறப்பட்டுச் சென்றது பற்றி அப். 9ல் கூறப்படாத விபரமான கருத்துக்கள் அப். 22ல் கூறப் பட்டுள்ளன.[11] கிரேக்க யூதர்கள் பவுலைக் கொல்ல விரும்பிய போது, தாம் எருசலேமிலேயே தங்கியிருப்பது தம்மைப் பொறுத்ததாக இருந்ததென்று பவுல், அப். 22ல் வலியுறுத்தினார்:*

> *"பின்பு நான் எருசலேமுக்குத் திரும்பி வந்து, தேவாலயத்தில் ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கையில், ஞானதிருஷ்டி யடைந்து, அவரைத் தரிசித்தேன். அவர் என்னை நோக்கி: 'நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம் பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமை விட்டுப் புறப்பட்டுப் போ' என்றார். அதற்கு நான்: 'ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக் கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெப ஆலயங்களில்*

அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது, நானும் அருகே நின்று, அவனைக் கொலை செய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலை செய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக் கொண் டிருந்ததையும், இவர்கள் அறிந்திருக்கிறார்களே' என்றேன். அதற்கு அவர்: 'நீ போ, நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதி களிடத்திலே அனுப்புவேன்' என்று சொன்னார்'' என்றான் (22:17-21).

முதலும் கடைசியுமாக, சவுல் கர்த்தருடன் விவாதம் பண்ணினார். ''நான் அவர்களை நம்பச் செய்ய முடியும்'' என்பதே அவர் கூறியதன் சாரமாகும் - "இல்லையென்றாலும், ஸ்தேவானைப் போலவே நானும் மரிக்கத் தயாராக இருக்கின் றேன்''[12] என்ற கருத்து மறைமுகமாக அதில் சேர்ந்திருந்தது. அதற்குக் கர்த்தர், "உன்னையும் மரிக்கப் பண்ண நான் தயாராக இல்லை! நீ நிறைவாகச் சென்றடைய வேண்டியது ஒன்று உண்டு - புறஜாதிகளுக்குப் பிரசங்கித்தல் என்ற அச்செயல் - இன்னும் உள்ளது. இங்கு நீ ஒன்றும் செய்ய முடியாது. இந்தப் பட்டணத்தை விட்டுச் செல், விரைவாக அதைச் செய்!" என்று பதில் அளித்தார். சவுல் விவாதிப்பதை நிறுத்தி விட்டுக் கீழ்ப்படிந்தார். அவர் மனக்கடினம் என்ற இடையூறை ஒப்புக் கொடுத்தலினால் நீக்கிப்போட்டார்.

புதிய கிறிஸ்தவர்களுக்கு நான் கொடுக்கக் கூடிய மிக முக்கியமான அறிவுரை பின்வருமாறு: கர்த்தரை நம்பி, அவரது ஞானத்தைச் சார்ந்திருங்கள்! தேவன் தமது வசனத்தில் நீங்கள் சிலவற்றைச் செய்யும்படிக் கூறினால், அவர் சரியானவராகவே இருக்கின்றார் - அவரது கட்டளைகளை நீங்கள் புரிந்துக் கொண்டாலும் புரிந்து கொள்ளவில்லையென்றாலும், அவர் சரியானவராகவே இருக்கின்றார். எந்தக் கேள்வியுமின்றி அவருக்குக் கீழ்ப்படியக் கற்றுக் கொள்ளுங்கள் - பிறகு அவர் உங்களை ஆசீர்வதிப்பார் என்பது நிச்சயமானதாக இருக்கும்!

## ஏமாற்றத்தின் இடையூறு (9:30)

சவுல் தர்சுப் பட்டணத்தை அடைந்தபோது, அவர் ஏமாற்றத்துடன் இருந்திருக்கக் கூடும். எருசலேமில் அவர் தமது முன்னாள் நண்பர்களுக்குப் பிரசங்கிக்க விரும்பியிருந்தார், ஆனால் கர்த்தரோ "பட்டணத்தை விட்டு வெளியேறு" என்று

*கூறிவிட்டார். சபையில் எங்கு உணர்வுக் கிளர்ச்சி மிகுந்த நிகழ்ச்சிகள் நடந்தனவோ அங்கு அவர் ஊழியம் செய்ய விரும்பினார், ஆனால் சகோதரர்களோ அவரை அவரது வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள்! சில வேளைகளில் நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் நமது கனவுகள் மற்றும் திட்டங்கள் ஆகியவை நிறைவேறாதபடியால் நாம் ஏமாற்றம் அடைகின் றோம். சபையை விட்டே போய் விடுமளவுக்கு ஏமாற்ற மடைந்த சிலரை நான் அறிவேன். சவுல் அப்படிச் செய்ய வில்லை. உண்மையாய் இருப்பதன் மூலம் அவர் தமது ஏமாற்றத்தின் இடையூறை நீக்கிப் போட்டார்.*

*சவுல் ஏழு ஆண்டுகள் தர்சுப் பட்டணத்தில் தங்கியிருந்தது அவரது மாபெரும் ஊழியச் செயல்பாடுகளுக்கான கர்த்தரின் திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்று நான் நம்புகின்றேன். தர்சுப் பட்டணத்தில் சவுல் தமது குடும்பம் மற்றும் நண்பர் களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளும் முதலாவது வாய்ப்பைப் பெற்றிருந்தார். அவர், அவர்களெல்லாரையும் மனமாற்றமடையச் செய்திருக்காவிட்டாலும்,[13] அவருக்கு மிகவும் நெருங்கியவர்களிடத்தில் புதிதாய்க் கட்டப்பட்ட தமது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்வது முக்கியமான தாயிருந்தது.*

*தர்சுப் பட்டணத்தில் சபைகள் நிலை நாட்டுதலில் சவுல் தமது திறமைகளைக் கூராக்கிக் கொள்ளக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தார். எருசலேமை விட்டுச் சென்ற பிறகு அவர் "சீரியா சிலிசியா நாடுகளின் புறங்களில்" (கலா. 1:21) வந்து சேர்ந்தார். பின்னாளில் பவுலும் சீலாவும் தங்கள் இரண்டாம் நற்செய்திப் பயணத்தின்போது, "சீரியாவிலும், சிலிசியாவிலும் திரிந்து, சபைகளைத் திடப்படுத்தினார்கள்" (15:41). அந்த சபைகள் முதல் நற்செய்திப் பயணத்தின் பாதைகளில் இருந்ததில்லை; அநேகமாக அவைகள் தர்சுப் பட்டணத்தில் சவுலின் ஊழியத்தின் போது நிலைநாட்டப் பட்டவைகளாய் இருந்திருக்க வேண்டும்.*

*மேலும், சவுல் தர்சுப் பட்டணத்தில் இருந்தபோது பொறுமையைக் கற்றுக் கொண்டார். தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் கர்த்தர் சவுலிடம் புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை அவர் எடுத்துச் செல்ல வேண்டும் என்று கூறினார் (26:15-18; இ.வ. 9:15; 22:15). மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு எருசலேமில்*

*கர்த்தர் அதே அறைகூவலை மறுபடியும் விடுத்தார் (22:21). ஆயினும் அதன்பிறகு ஏழு ஆண்டுகள் கழித்துத்தான் சவுல் முதன்முறையாகப் புறஜாதியாருக்குப் பிரசங்கித்தார்![14] சவுல் ''கர்த்தருக்குக் காத்திருக்க'' (சங். 37:9) கற்றுக் கொள்ள வேண்டியதாயிருந்தது.*

*இறுதியாக, தர்சுப் பட்டணத்தில் சவுல் உபத்திரவங்களைச் சகித்துக் கொள்ளக் கற்றுக் கொண்டார் என்று நான் நம்புகின்றேன். பின்னாளில் அவர், தாம் அடிக்கடி சிறைப்பட்டதையும், யூதர்களால் ஐந்து தரம் அடிக்கப்பட்டதையும், ரோமர்களால் மூன்றுதரம் அடிக்கப்பட்டதையும், மூன்று தரம் கப்பற்சேதத்தில் இருந்ததையும் பற்றி எழுதினார்.[15] அந்த உபத்திரவங்களைச் சவுல் எழுதியிருந்த வேளையில், ரோமரால் ஒருமுறை அடிபட்டது (16:22, 23), ஒருமுறை சிறைப்பட்டது (16:23) பற்றி மட்டுமே லூக்கா பதிவு செய்துள்ளார், அவர் (லூக்கா) யூதர்கள் அடித்தது பற்றியோ, கப்பற்சேதம் பற்றியோ அப்பொழுது எதுவும் எழுதியிருக்கவில்லை.[16] பதிவு செய்யப்பட்டிராத இந்த சம்பவங்களில் பெரும்பாலானவைகள் சீரியா மற்றும் சிலிசியாவில் சவுலின் ஏழு ஆண்டுகள் ஊழியக்காலத்தில் நடைபெற்றிருக்க வேண்டும். பதினோராம் அதிகாரத்தில், சிலுவைக்குப் பக்குவப்பட்ட ஒரு அனுபவசாலியாக, தேவன் கொடுக்கும் எந்தப் பொறுப்பையும் நிறைவேற்றத் தயாரானவராக, சாத்தான் கொடுக்கும் எந்த மோசமான சோதனையையும் தாங்கக் கூடியவராக சவுல் மறுபடியும் காணப்படுவார்!*

*சவுல் எருசலேமில் தங்க விரும்பினார், ஆனால் அவர் தர்சுப் பட்டணத்திலிருப்பது தேவை என்று கர்த்தர் கூறினார் - கர்த்தர் கூறியது சரியானதாகவே இருந்தது. கிறிஸ்துவுக்குள் குழந்தைகளே, நீங்கள் ஏமாற்றமடையும் போது கூட, உங்கள் பரலோகத்தின் பிதாவை மறுப்பின்றி முழுமையாக நம்புங்கள். அவரிடத்தில் இன்னும் அதிகமாய் நெருங்குங்கள். அவருடைய வசனத்தின் மூலமாக அவர் உங்களுடன் பேசுவதை அனுமதியுங்கள். ஜெபத்தில் அவருடன் பேசுங்கள். உங்கள் இருதயத்தின் யாதொரு மற்றும் ஒவ்வொரு நினைவுடனும் அவரிடம் செல்லக் கற்றுக் கொள்ளுங்கள்.*

*எனது கடைசி மகள் ஆஞ்செலா எப்பொழுதுமே இளகிய மனச்சாட்சியுடைவளாயிருக்கிறாள். அவள் ஒரு குழந்தையாக இருந்தபோது, ஒவ்வொரு மாலையிலும் படுக்கையில் படுக்கும்*

*வேளையில், அவள் தனது அன்றைய நாளைப் பற்றி என்னிடத்தில் கூறுவாள் - பெரும்பாலும் தனது மனச்சுமைகளை இறக்கி வைப்பாள். சிலவேளைகளில் தனது குழந்தைத் தனமான செயல்பாட்டின் நினைவு அவளைத் தூங்க அனுமதிக்காத போது, அதை அறிக்கை செய்வதற்காக நள்ளிரவில் என்னை எழுப்புவாள். ''ஆஞ்சி செய்வது சில சமயங்களில் சரியாக இருக்காது; ஆனால் அவள் சரியாகச் செய்யாதபோது, விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ அதைப் பற்றி அவள் நமக்குக் கூறிவிடுவாள்'' என்று நானும் எனது மனைவியும் அடிக்கடி சொல்வதுண்டு. ஆஞ்சி எங்களை நேசித்து, நம்பியதால் எங்களிடம் தனது மனதைத் திறக்க முடியும் என்று அறிந்தாள். இது போலவே நீங்கள் உங்கள் கர்த்தரை நேசித்து அவரை நம்புங்கள். அவருடைய பலம் மற்றும் போஷிப்பைச் சார்ந்திருங்கள் - தர்சுப் பட்டணத்தில் சவுல் புரிந்து கொள்ள இயலாத தெளிவற்ற நிலையிலும் உண்மையுள்ளவராய் இருந்தது போலவே நீங்களும் உண்மையுள்ளவராயிருங்கள்.*

## முடிவுரை

*சவுல் கிறிஸ்தவ வாழ்க்கையை சுலபமானதாகக் கண்டிருக்க வில்லை, ஆனால் அதை அவர் நடைமுறைச் சாத்தியமற்றதாக வும் கண்டிருக்கவில்லை, தமது கர்த்தராலே, தாம் எவ்விதத் தடையையும் தாண்டிச் செல்ல முடியும் என்று அவர் கண்டார் (பிலி. 4:13)! நாமும் அதைச் செய்ய முடியும். நாம் அப்படிச் செய்தால், நமது வாழ்க்கையின் முடிவில், நமது பந்தயம் முடியும் வேளையில், வெற்றியின் கிரீடத்துடன் கர்த்தர் காத்திருக்கின்றார். பின்னாளில் இந்த அப்போஸ்தலர் கூறியபடி, "இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப் பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திர மல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (2 தீமோ. 4:8).*

*லூக்கா வழக்கமாய் எழுதும் ஒரு வளர்ச்சி அறிக்கையுடன் அதிகாரம் 9 நிறைவடைகின்றது: ''அப்பொழுது யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள்[17] சமாதானம் பெற்று,[18] பக்தி விருத்தியடைந்து (20:32), கர்த்தருக்குப்*

*பயப்படுகிற பயத்தோடும் (நீதி. 1:7; 9:10; 10:27; 14:27; பிர. 12:13), பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும்[19] நடந்து பெருகின" (9:31).* லூக்காவின் வார்த்தைகள் சபையை முழுமையாகக் குறிப்பிடுகின்றன, ஆனால் சபையென்பது - உங்களைப் போன்ற - மனிதர்களால் ஆனது. சவுலின் தொடக்காலக் கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றிய பாடங்களைப் படித்துக் கடைப்பிடித்தால், நீங்கள் தனிப்பட்ட முறையில் சந்தோஷத்தை அனுபவித்து, ஆவிக்குரிய முறையில் கட்டி எழுப்பப்படுவீர்கள் என்று ஆலோசனை கூறி இவ்வசனப் பகுதியை நாங்கள் தவறாகப் பயன்படுத்தப் போவதில்லை! "கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்திலும், பரிசுத்த ஆவியான வரின் ஆறுதலிலும்'' நீங்கள் தொடர்ந்து நடக்கும்போது, தேவனுடைய குழந்தையாக நீங்கள் வளர முடியும்! நீங்கள் அவ்விதம் செய்ய வேண்டும் என்பதே எனது இடைவிடாத ஜெபமாகும்!

## காட்சி-உதவிக் குறிப்புகள்

இடையூறுகள் என்ற கருத்தே ஒரு காட்சியை முன் நிறுத்துகின்றது. பந்தய ஓட்ட சாலையொன்றில் இருக்கக் கூடிய வரிசையான இடையூறுகளை வரையுங்கள். அவைகளை, "தோல்வி", "உபத்திரவம்", "கடந்த காலம்'', "மனக்கடினம்'' மற்றும் ''ஏமாற்றம்'' என்று பெயரிடுங்கள். பின்பு ஓடுபவர் ஒருவரின் படம் வரைந்து அவர் அந்த இடையூறுகளைத் தாண்டிச் செல்வது போலக் காட்டுங்கள் (குழந்தைகள் வரைவது போன்ற ''குச்சிப் படங்கள்'' போதுமானதா யிருக்கும்). ஒவ்வொரு இடையூறையும் சவுல் எவ்விதம் நீக்கிப் போட்டார் என்று எழுதுங்கள்: சவுல் தோல்வியின் இடையூறை விசுவாசத்தாலும், உபத்திரவத்தின் இடையூறைச் சகிப்புத் தன்மையினாலும், கடந்த காலத்தின் இடையூறைப் பொறுமை யினாலும், மனக்கடினத்தின் இடையூறை ஒப்புக் கொடுத்தலி னாலும், ஏமாற்றத்தின் இடையூறை விசுவாசத்தினாலும் நீக்கிப் போட்டார்.

## பிரசங்கக் குறிப்புகள்

*அப். 9:31 வசனப்பகுதியானது "[உள்ளூர் சபையின் பெயர்]க்கான இலக்குகள்" என்ற தலைப்பில் வசனப் பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட முடியும்: (1)* Rest *("சபை ... சமாதானம் பெற்றது"); (2)* Rejuvenation *("பக்தி விருத்தி யடைந்து"); (3)* Respect *("கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தி லும்"); (4)* Resources *("பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும்"); மற்றும் (5)* Result *("நடந்து பெருகின"). இந்தக் கருத்துக்களில் மூன்று கருத்துக்கள் மட்டும்* C. Bruce White *அவர்களின் "ஆதி சபையின் பலம்" என்ற பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்டவை. இப்பிரசங்கம்* *The Preacher's Periodical* (now *Truth for Today*), March 1987 *இதழில் வெளியாயிற்று.*

---

குறிப்புகள்

*[1]1 கொரி. 3:1, 2; எபி. 5:12-14 ஆகியவற்றைக் காணவும். முதிர்ச்சியடையாத கிறிஸ்தவர்கள் இழந்து போகப்படக் கூடும் என்பதை இவ்வசனப்பகுதிகளும் மறைமுகமாய் உணர்த்துகின்றன! [2]அவர்கள் இயேசுவையும், ஸ்தேவானையும் கூட இதே விதமாகவே கொலை செய்ய முயன்றனர். [3]ஒருவேளை அரேத்தாவினால் தற்காலிகமாகத் தமஸ்கு நகரம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கலாம் (இந்தக் காலக் கட்டத்தில் ரோமானிய நாணய முறை எதுவும் தமஸ்குவில் இருக்கவில்லை). ஒருவேளை அரபு நாட்டின் படைகள் நகரத்திற்கு வெளியே அதன் வாசல்களைக் காத்துக் கொண்டிருக்கலாம் (அரபுப் பாலைவனத்தின் முனையில் தமஸ்குப் பட்டணம் இருந்தது). ஒருவேளை சேனைத் தலைவனின் முயற்சி சொந்தமான தாயிருந்து, அப்பட்டணத்தில் இருந்த அரபு மக்களால் மட்டும் வரைமுறைப் படுத்தப்பட்டிருக்கலாம் (அதுவே ஏற்புடையது). [4]இவ்விரண்டு குழுக்களும் ஒன்றையொன்று பல காரணங்களுக்காக வெறுத்தன. சில வருடங்களுக்குப் பின் (கி.பி. 66ல்) நபாட்டியன் அரபு அரசன் தமஸ்குவில் 10,000 க்கும் அதிகமான யூதர்களைக் கொன்று குவித்தான். [5]தமஸ்குவில் பிரசங்கத்தின் மூலம் சவுல் கலக்கத்தை உண்டு பண்ணினார்; அரபு தேசத்தில் இருந்தபோது அவர் அங்கும் கலக்கத்தை உண்டு பண்ணியிருக்கலாம். [6]மூன்று வருஷங்களுக்கு முன்பே சீஷர்கள் எருசலேமை விட்டுத் துரத்தப் பட்டிருந்தார்கள் (8:1), இங்குள்ள சீஷர்கள் யார்? சிலர் ஒருவேளை போகாமல் இருந்திருக்கலாம் மற்றும் சிலர் திரும்ப வந்திருக்கலாம். (சிலர் சமீபத்தில் மனமாறியிருக்கலாம், ஆனால் "பயந்தார்கள்" என்ற வார்த்தையானது அங்கிருந்தவர்களில் பெரும்பான்மையானோர் சவுலினால் தொடக்கத்தில் உபத்திரவப்படுத்தப்பட்டவர்களே என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது). "எல்லா" சீஷர்களும் சவுலை நம்பவில்லை என்பதால் அநேகமாய் இது அப்போஸ்தலர்களையும் உள்ளடக்குவதாயிருக்கின்றது. [7]மூன்று*

*ஆண்டுகளுக்கு முன்பாகவே சவுல் மனமாற்றமடைந்திருந்தார் என்பதால், எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்கள் அதை எப்படி அறியாமலிருந்தனர் என்று சிலர் வியப்படைகின்றார்கள். இதற்கு அநேக காரணங்கள் இருக்கலாம்: (1) அந்நாட்களில் செய்தித் தொடர்பானது சிறந்த முறையில் இருக்கவில்லை. (2) அந்த சமயம் நான்காம் அரேத்தா தமஸ்குவைக் கட்டுப்படுத்தியிருந்தால் எருசலேமுக்கும் தமஸ்குவுக்கும் தொடர்பானது மிகக் குறைவாகவே இருந்திருக்கும். (3) சவுல் அரபு தேசத்தில் நீண்ட நாட்கள் "மறைவாயிருந்த" விஷயமானது சந்தேகங்களை எழுப்பியிருக்கலாம். ஆயினும், எருசலேமில் சீஷர்களைச் சவுல் மிகவும் ஆழமாகப் புண்படுத்தியிருந்ததே மிகவும் முக்கியமான காரணியாகும், அவர் கூறிய எதையும் நம்புவதென்பது அவர்களுக்கு மிகவும் கடினமாயிருந்தது. [8]சவுல் இயேசு கூறியதைக் கேட்டது மட்டுமல்லாது, அவரைப் பார்த்தார் என்பதும் வலியுறுத்தப்பட்டது. [9]முதன்முறை சவுல் ஸ்தேவானை அங்கு சந்தித்திருக்கலாம் . [10]ஒரு இயக்கத்தில் இருந்து பின் அதைவிட்டு விலகி அதை எதிர்ப்பவர், அந்த இயக்கத்தின் அங்கமாயிராமல் எதிர்ப்பவரைக் காட்டிலும் அதிகமாய் வெறுக்கப்படுகின்றார். இவ்வியல்புக்குரிய சொந்த அனுபவங்களை இவ்விடத்தில் கிரேக்கரானவர்(யூதர்)கள் சவுல் மேல் காட்டிய வெறுப்பைக் குறிப்பிடப் பயன்படுத்தலாம்.*

*[11]அநேகர் இந்த நிகழ்ச்சியை, 11:27-30; 12:25 ல் பதிவு செய்யப்பட்டுள்ள சவுலின் எருசலேம் பயண விவரத்துடன் இணைக்கின்றார்கள்; ஆனால் அந்தப் பயணத்தில் சவுல் எருசலேமில் பிரசங்கித்ததற்கான பதிவு எதையுமோ அல்லது அந்த நிகழ்ச்சியின் போது சவுல் திடீரென்று எருசலேமை விட்டுச் செல்ல வேண்டியதாயிருந்தது என்பதற்கான அடையாளங்களையோ நாம் காண முடிவதில்லை. 22:17-21ல் காணப்படும் வரலாறு 9:29, 30 உடன் சரியாகப் பொருந்துவதாக எனக்குப் படுவதால், இதை இவ்விடத்தில் உள்ளடக்கியிருக்கின்றேன். [12]பவுல், தாம் சரியென்று நினைத்ததைச் செய்யாதபடிக்கு கொலை செய்யப்படுவோம் என்ற அச்சுறுத்தலை என்றைக்கும் அனுமதித்ததில்லை (இ.வ. 20:24). "ஸ்தேவானைப் போல" மரிப்பது பற்றி, ஸ்தேவான் கூறியது போன்ற ஒரு கூற்றைப் பவுலும் கூறுவதை 2 தீமோ. 4:16ல் காணவும். [13]அவர் தமது சகோதரியை மனமாற்றமடையச் செய்திருக்கலாம்; குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களைப் போல் அவர் அவளிடமிருந்து குறைந்த பட்சம் அந்நியப் படுத்தப்படாமலாவது இருந்திருப்பார் (23:16). சிலர், ரோமர் 16:7, 11, 21ல் குறிப்பிடப்படும் "இனத்தார்" என்பது சரீரப் பிரகாரமான நெருங்கிய உறவுமுறையை (குடும்ப உறவுமுறையை) குறிக்கிறது என்றும் நினைக்கின்றார்கள். [14]பேதுரு முதன்முதலாகப் புறஜாதியார் (கொர்நேலியு) மற்றும் அவரது குடும்பத்திற்குப் பிரசங்கித்த பிறகு (அப். 10; இ.வ. 15:7-9), மற்றவர்களும் சீரியாவின் அந்தியோகியாவிலே (11:20) புறஜாதிகளுக்குப் பிரசங்கிக்கத் தொடங்கினார்கள். சவுல் அந்தியோகியாவுக்கு வந்தபோது, அநேகமாய் அவர் முதன்முறையாகப் புறஜாதியாருக்குப் பிரசங்கித்திருப்பார் (11:25, 26). எந்த விதத்திலும், 15:7-9ல் பேதுருவின் வார்த்தைகளானது சவுல் தர்சுப் பட்டணத்தில் இருந்தபோது புறஜாதிகளுக்குப் பிரசங்கித்திருப்பார் என்ற கருத்தைத் தவிர்ப்பதாய் இருக்கின்றது. [15]2 கொரிந்தியார் 11:23-25. மூன்றாவது நற்செய்திப் பயணத்தின் முடிவு நேரத்தில் மக்கெதோனியாவில் இருந்து 2 கொரிந்தியார் நிருபம் எழுதப்பட்டது (பின்வரும் இதழ் ஒன்றில் 20:1, 2 க்கான குறிப்புகளைக் காணவும்), இது சவுலின் தர்சுப் பட்டண ஊழியத்திற்குப் பிறகு பன்னிரெண்டு வருடங்கள் கழித்து எழுதப்பட்டதாகும். [16]அப். 27ல் காணப்படும் கப்பற்சேதமானது 2 கொரிந்தியர் நிருபம் எழுதப்பட்ட பிறகு நடைபெற்றதாகும். [17]சில கையெழுத்துப் பிரதிகளில், இவ்விடத்தில் "சபைகள்" என்று பன்மைப் பெயர்ச்சொல் காணப்படுகின்றது (KJV மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பிலும் இவ்வாறே உள்ளது). ஆனால் பழைய கையெழுத்துப் பிரதிகள் பலவற்றில் ஒருமைப்*

பெயர்ச்சொல் - அப். நட. புத்தகத்தில் "சபை" என்ற வார்த்தையின் வழக்கமற்ற பயன்பாடு - காணப்படுகின்றது. இம்மூன்று மாகாணங்களிலும் பல எண்ணிக்கையில் உள்ளூர் சபைகள் இருந்தாலும் (கலா. 1:22), லூக்கா பலஸ்தீனப் பகுதிகளில் இருந்த எல்லா கிறிஸ்தவர்களையும் "சபையார்" என்ற ஒருமித்த பார்வையிலேயே பார்க்கின்றார். [18]"சபைகள் சமாதானம் பெற்று ... பெருகின" என்று கூறும்போது சபை இவ்வாறு இருக்கும்படி சாத்தான் தொடர்ந்து விட்டுவிட மாட்டான். இங்கு "சபை சமாதானம் பெற்றது" என்பதற்கான முக்கிய காரணம், பிரதானமாய் உபத்திரவப்படுத்தியவர் மனம் மாறினார் என்ற முக்கிய சிந்தனையே இவ்விடத்தில் சந்தர்ப்பப் பொருளாய் அமைந்துள்ளது. சவுல் அப்பகுதியிலிருந்து (கிரேக்கரானவர்களுக்கு எவ்வித இலக்குமின்றி) விட்டுச் சென்றதால் சபை சமாதானம் பெற்றது என்ற குறிப்பும் இதில் இருக்கலாம். [19]இது அநேகமாக, ஒவ்வொரு கிறிஸ்தவருக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் வாசமாயிருந்து, கொடுக்கின்ற ஆறுதலையும் தைரியத்தையும் குறிக்கின்றது.